| H013191306 21015335, H013191306 21072446 | 1) Vimala N (borrower) & 2) Nithiyaanandan (co-borrower) | All That Piece And Parcel Of Land And Building, Land Bearing Door No. 5, Plot No. 14 Pilaiyar Koil Street Durga Nagar, Tambaram Sanatorium Chennai Comprised In S.NO.377/5A1 Of Measuring An Extent Of 1200 Sq.ft.,situated At Thiruneermalai Village, Alandur Taluk Kancheepuram Measuring North To South On The Eastern Side 30 Feet, North To South On The Western Side 30 Feet, East To West On The Northern Side 40 Feet And East To West On The Southern Side 40 Feet In All Measuring 1200 Sq.ft., Situated Within The Registration District Of Chennai South And Sub Registration District And The Property Lies Within The Limits Of Thiruneermalai Town Panchayat And Bounded On East By: Plot No. 13, West By: 15, North By 20 Feet Wide Road, South By: Land In S.no. 377/5A. | 08.09.2025 | Rs. 82,33,622.64/- As on 30-09-2025 | 21.11.2025 Symbolic Possession |

The Borrower/ Co-borrowers/ Guarantors in particular and public in general is hereby cautioned not to deal with the property and any dealing in the property would be subject to the charge of L&T Finance Limited for an amount mentioned in the demand notice together with further interest and other charges from the date of demand notice till payment/realization.

**Date:** 27.11.2025
**Place:** Kancheepuram

Sd/-
**Authorized Officer**
For L&T FINANCE LIMITED

**வாக்களிப்பதை தவறவிடாதீர்...**

# அரசியலமைப்பு சட்ட கடமைகளே வலுவான ஜனநாயகத்துக்கு அடித்தளம்: நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி கடிதம்

புதுடெல்லி, நவ.27

**'நாட்டு மக்கள் அனைவரும் அரசியலமைப்பு கடமைகளை நிறைவேற்ற வேண்டும். இந்த கடமைகளே ஒரு வலுவான ஜனநாயகத்திற்கு அடித்தளம்' என்று நாட்டு மக்களுக்கு எழுதிய கடிதத்தில் பிரதமர் மோடி கூறியுள்ளார்.**

அரசியலமைப்பு சட்ட தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி ஒரு கடிதம் எழுதி உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

கடமையை செய்வதன் மூலம்தான் உரிமை வருகிறது என்பது மகாத்மா காந்தியின் நம்பிக்கை. கடமையை நிறைவேற்றுவதுதான் சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கு அடித்தளம். அரசியலமைப்பு சட்டம் வலியுறுத்தும் கடமைகள்தான் வலிமை யான ஜனநாயகத்துக்கு அடித்தளம்.

அடிப்படை கடமைகள் குறித்து பிரிவு 51ஏல் அரசியலமைப்பு சட்டம் வலியுறுத்துகிறது. இந்த கடமைகள், சமூக, பொருளாதார முன்னேற்றத்தை எப்படி கூட்டாக எட்டுவது என்று நமக்கு வழிகாட்டுகின்றன.

இன்று எடுக்கப்படும் முடிவுகளும், கொள்கைகளும் எதிர்கால தலைமுறைகளின் வாழ்க்கையை வடிவமைக்கும். வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி இந்தியா முன்னேறுவதால், ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளுக்கு மனதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

நமது நாடு நமக்கு எவ்வளவோ கொடுத்துள்ளது. இது நமக்குள் ஆழ்ந்த நன்றி உணர்வை உருவாக்குகிறது. இந்த உணர்வுடன் நாம் வாழும்போது, நமது கடமைகளை நிறைவேற்றுவது இயற்கையின் அங்கமாகி விட்டது.

நமது ஒவ்வொரு செயலும் அரசியலமைப்பு சட்டத்தை வலுப்படுத்த வேண்டும். அரசியலமைப்பு சட்டத்தை வகுத்தவர்களின் கனவுகளை நினறைவேற்றுவது நமது பொறுப்பு. இந்த கடமை உணர்வுடன் நாம் பணியாற்றும்போது, நமது நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றம் பலமடங்கு பெருகும்.

சர்தார் படேலின் தொலைநோக்கு பார்வை, இந்தியாவை ஒன்றிணைக்க உதவியது. அவரது உத்வேகம் மற்றும் துணிச்சல்தான், 370, 35ஏ பிரிவுகளுக்கு எதிராக செயல்பட நமக்கு வழிகாட்டின.

அதன்விளைவாக, காஷ்மீரில் அரசியலமைப்பு சட்டம் முழுமையாக அமலில் உள்ளது. மக்களுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு அனைத்து அரசியலமைப்பு சட்ட உரிமைகளும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

அரசியலமைப்பு சட்டம், மக்களுக்கு வாக்களிக்க உரிமை அளிக்கிறது. எனவே, தேசிய தேர்தல், மாநில தேர்தல், உள்ளாட்சி தேர்தல் என அனைத்திலும் வாக்களிப்பதை மக்கள் தவறவிடக்கூடாது.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26ந் தேதி, பள்ளி, கல்லூரிகளில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். அவற்றில், 18 வயது பூர்த்தியடைந்த முதல்முறை வாக்காளர்களான மாணவர்களை கவரவிக்க வேண்டும். அதனால், தேச கட்டுமான பணியில் தாங்களும் தீவிர பங்கெடுப்பதை அம்மாணவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

எளிய பின்னணியில், பொருளாதார ரீதியாக நலிந்த குடும்பத்தில் இருந்து வந்த என்னை போன்ற ஒருவர், அரசாங்க தலைமை பதவியில் தொடர்ந்து 24 ஆண்டுகள் நீடிப்பது அரசியலமைப்பு சட்டத்தின் சக்தியை காட்டுகிறது.

2014ம் ஆண்டு நடந்தது எனக்கு நினைவு இருக்கிறது. முதல்முறையாக நான் நாடாளுமன்றத்துக்கு வந்தபோது, அதன் படிக்கட்டுகளில் தலைவைத்து வணங்கினேன். 2019ம் ஆண்டு, அரசியலமைப்பு சட்ட புத்தகத்தை தலையில் வைத்துக்கொண்டு, நாடாளுமன்ற மைய மண்டபத்துக்குள் நுழைந்தேன்.

என்னை போன்றவர்களுக்கு கனவு காண்பதற்கான சக்தியையும், அதை நோக்கி பணியாற்றுவதற்கான வலிமையையும் அரசியலமைப்பு சட்டம் அளித்துள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

# கடையநல்லூர் அருகே விபத்தில் தாயை இழந்த மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு அரசு வேலை

கடையநல்லூர், நவ.27

கடையநல்லூர் அருகே பஸ்கள் மோதிய விபத்தில் 7 பேர் பலியானார்கள். இதில் தாயை இழந்த மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் கூறி, அரசு வேலை வழங்கினார்.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே துரைச்சாமியாபுரம் காமராஜர் நகர் பகுதியில் கடந்த 24ந்தேதி இரு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட கோர விபத்தில் 6 பெண்கள் உள்பட 7 பேர் பலியானார்கள்.

இதில் புளியங்குடி டி.என்.புதுக்குடியைச் சேர்ந்த முத்துராமன் மனைவி மல்லிகா (வயது 55) தனது உறவினர்களுடன் துக்க வீட்டுக்கு சென்றபோது விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

இவருக்கு பார்வையற்ற மாற்றுத்திறனாளி கார்த்திகா (33) உள்ளிட்ட 2 மகள்களும், ஒரு மகனும் உள்ளனர். ஒரு மகனுக்கும், ஒரு மகளுக்கும் திருமணமாகி விட்டது. எம்.ஏ. ஆங்கிலம், பி.எட். படித்த கார்த்திகாவுக்கு இன்னும் திருமணமாகவில்லை. அவர் ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றிருந்தார்.

மல்லிகாவுக்கு திருமணமாகி குழந்தைகள் பிறந்த சில ஆண்டுகளில் கணவர் இறந்து விட்டார். இதனால் அவர் பீடி சுற்றி, பிள்ளைகளை வளர்த்து வந்தார். வயது முதிர்ந்த தனது தாயாரையும், பார்வையற்ற மாற்றுத்திறனாளி மகள் கார்த்திகாவையும் பராமரித்து வந்தார்.

விபத்தில் தாய் மல்லிகா இறந்ததால், ஆதரவற்று தவித்த மாற்றுத்திறனாளி கார்த்திகா கதறி அழுதது காண்போரை கலங்கச் செய்தது.

நிர்க்கதியாக தவிக்கும் அவருக்கு படிப்புக்கு ஏற்ற அரசு வேலை வழங்க வேண்டும் என்று உறவினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று காலையில் செல்போனில் தொடர்பு கொண்டு மாற்றுத்திறனாளி கார்த்திகாவிடம் பேசி ஆறுதல் கூறினார்.



அதனை தொடர்ந்து சிறிது நேரத்தில் புளியங்குடி டி.என்.புதுக்குடியில் உள்ள கார்த்திகாவின் வீட்டுக்கு மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர் நேரில் சென்றார். அவர், கார்த்திகாவுக்கு ஆறுதல் கூறி, புளியங்குடி நகராட்சி அலுவலகத்தில் டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் பணி நியமன ஆணையை வழங்கினார்.

### ஆசிரியர் வேலை

கார்த்திகாவின் உறவினர்கள் கூறுகையில், ''கார்த்திகாவுக்கு மீண்டும் பார்வை கிடைக்க வழி இருந்தால், அதற்கு உரிய சிகிச்சை பெற அரசு உதவ வேண்டும்.

அவர் ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளதால், விரைவில் அரசு பள்ளியில் ஆசிரியர் வேலை வழங்க வேண்டும்'' என்றனர்.

# மராட்டிய மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு ரூ.9,800 கோடி: மத்திய மந்திரிசபை ஒப்புதல்

புதுடெல்லி, நவ.27

மராட்டிய மாநில மெட்ரோ ரெயில் திட்டத்தை ரூ.9,800 கோடியில் நிறைவேற்ற மத்திய மந்திரி சபை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற மத்திய மந்திரி சபை மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான மந்திரி சபை கூட்டங்களில் 4 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த 4 திட்டங்களும் ரூ.19 ஆயிரத்து 919 கோடி மதிப்பிலானவை ஆகும்.

இதுகுறித்து மத்திய ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் நேற்று விரிவாக எடுத்துரைத்தார்.

அதில் முக்கியமானது பூமியில் கிடைக்கும் அரிய நிரந்தர காந்தங்கள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான திட்டமாகும். இந்த திட்டம் ரூ.7,280 கோடி மதிப்பிலானது. இந்த திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு 6 ஆயிரம் டன் காந்தத்தை உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டு உள்ளது.

மின்சார வாகனங்கள், புதுப்பிக்கத் தக்க எரிசக்தி, தொழில்துறை பயன்பாடுகள் மற்றும் நுகர்வோர் மின்னணு சாதனங்கள் ஆகியவற்றின் தேவை வளர்ந்து வருவதை கருத்தில் கொண்டு இந்த திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு இருப்பதாக மந்திரி தெரிவித்தார். இந்த திட்டத்தின் மொத்த காலம் 7 ஆண்டுகள் ஆகும். இதில் ரூ.750 கோடி மூலதன மானியமாக அடங்கி உள்ளது.

மந்திரி சபை ஒப்புதல் கொடுத்த அடுத்த முக்கியமான திட்டம் புனே மெட்ரோ ரெயிலின் 2ம் கட்ட திட்டமாகும். இந்த திட்டம் ரூ.9,858 கோடி மதிப்பிலானது. அடுத்ததாக குஜராத் மற்றும் மராட்டிய மாநிலங்களில் 4 மாவட்டங்களை உள்ளடக்கிய 2 ரெயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.


IKF Home Finance

**ஐகேஎப் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்**

ஈக்வினாக்ஸ் பீனிக்ஸ் – டவர் 3, 10வது தளம், டயமண்ட் ஹில்ஸ், லும்பினி அவென்யூ, ராய் துர்க், கச்சிபௌலி, ஹைதராபாத் | தெலுங்கானா – 500081

**அசையா சொத்து சுவாதீனம் எடுத்த அறிவிப்பு** [(பிற்சேர்க்கை IV விதி 8 (1) ன் கீழ்)]

கீழே கையொப்பமிட்டுள்ள **ஐகேஎப் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டின்** (இனி "IKF" என அழைக்கப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் (54 ஆப் 2002), மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்பவும், மேற்படி சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் கடன்தாரர்களாகிய நீங்கள் (கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள்) அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் அதற்கான வட்டியையும் அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர்(கள்) மேற்குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13, துணை பிரிவு (4)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் 8வது விதிமுறைக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து "IKF"க்கு செலுத்த வேண்டிய கீழ்க்கண்ட தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண் | கடன்தாரர் / உத்தரவாததாரர் பெயர் மற்றும் கடன் கணக்கு எண் | பாதுகாக்கப்பட்ட சொத்துகளின் விவரம் (அசையா சொத்து) | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை | சுவாதீனத் தேதி |
|---|---|---|---|---|
| 1. | கடன் கணக்கு எண். LNTNG00923-240009745<br>1. திரு. சந்திரபாபு செங்கல்வராயன், த/பெ. திரு.செங்கல்வராயன்,<br>2. திருமதி வாணி சந்திரபாபு, க/பெ. திரு. சந்திரபாபு செங்கல்வராயன்,<br>இருவரது வசிப்பிடம்: எண்.230A, KCC தெரு, பாதிரிவேடு, மாதர்பாக்கம் சந்தை அருகில், காஞ்சிபுரம், தமிழ்நாடு 601202 | சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். நிலம் மற்றும் கட்டிடம். வினாயகர் நகரில் உள்ள நிலத்தின் விஸ்தீரணம் 100 சதுர மீட்டர் அல்லது 1090 சதுர அடி மற்றும் கட்டிடம், பழைய கிராமநத்தம் சர்வே எண்.112/பகுதி, பட்டா எண்.4026, பட்டா புதிய சர்வே எண்.112/45ன் படி, இந்த சொத்து மாதர்பாக்கம் கிராமம், கும்மிடிப்பாண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட எல்லைகளுக்குள் உள்ளது. வடக்கு : சாலை, தெற்கு : சொத்து திரு. வி. சின்னவீரபத்திரருக்குச் சொந்தமானது, கிழக்கு : சொத்து எம்.டி. சண்முகத்திற்குச் சொந்தமானது, மேற்கு : சாலை. விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 21.8 அடி., கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 21.8 அடி., வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 50 அடி., வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 50 அடி. திருவள்ளூர் பதிவு மாவட்டம் மற்றும் கும்மிடிப்பூண்டி சார் பதிவு மாவட்டத்தில் இந்த சொத்து உள்ளது. | 24.03.2025<br>ரூ.13,45,315.92/- (ரூபாய் பதின்மூன்று லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து முந்நூற்று பதினைந்து மற்றும் தொண்ணூற்று இரண்டு பைசா மட்டும்) | 24.11.2025 |

இடம் : திருவள்ளூர், தமிழ்நாடு
தேதி : 24.11.2025

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐகேஎப் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்காக



VASTU HOUSING FINANCE

**வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**

யூனிட் எண். 203 & 204, 2வது தளம், ஏ விங், நவ்பாரத் எஸ்டேட், ஜக்காரியா பண்டர் மார்க் சாலை செவ்ரி (மேற்கு), மும்பை 400 015, மகாராஷ்டிரா
CIN No.: U65922MH2005PLC272501

**சுவாதீனம் எடுத்த அறிவிப்பு**

கீழே கையொப்பமிட்டுள்ள **வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 9வது விதிமுறைக்கு ஏற்பவும் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு டிமாண்ட் நோட்டீசை வெளியிட்டார். அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கீழ்குறிப்பிட்டுள்ள தொகை மற்றும் மேலும் மேற்சொன்ன டிமாண்ட் நோட்டீஸ் தேதியிலிருந்து நோட்டீஸ் கிடைத்த அறுபது (60) நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர்கள் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால், கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(4)ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிகளின் 9வது விதிமுறைக்கு இணங்கவும், கீழ்க்கண்ட தேதியில் சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

கடன்தாரர் மற்றும் உத்தரவாததாரர்கள் குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் சொத்துக்களைக் கையாள வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறார்கள், மேலும் கூறப்பட்ட சொத்துக்கள் வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் கிளைக்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் மேலும் வட்டி மற்றும் செலவுகளுக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித கையாளுலும் மேற்கொள்ள வேண்டாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண். | கடன்தாரர், உடன் கடன்தாரர் பெயர், கடன் கணக்கு எண். | டிமாண்ட் நோட்டீஸ் தேதி & தொகை | சொத்து குறித்த விவரம் | சுவாதீன வகை & தேதி |
|---|---|---|---|---|
| 1 | வெங்கடேசன் ஆர், வித்யாசங்கரி எம் HL0000000062339 | 18/ஜூலை/25<br>09/ஜூலை/25 அன்று ரூ.3782454 | நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். விஸ்தீரணம் 470 சதுர அடி (மொத்தம் 900 சதுர அடியில்), 39% சதுர அடியுடன், பொதுவான பகுதி பங்கு மற்றும் உரிமை (அதாவது, 78½ சதுர அடியில் பாதி பங்கு அல்லது 786 சதுர அடியில் 20ல் 1 பங்கு), ஆக மொத்தம் அனைத்தும் சேர்த்து 5094 சதுர அடி, ச.எண்.124 மற்றும் பட்டா எண்.3325, வார்டு எண்.எப், பிளாக் 14, டி.எஸ்.எண்.2/10, சாத்தங்காடு கிராமம், திருவொற்றியூர் தாலுகா, சென்னை மாவட்டம் 600019ல் இந்த சொத்து உள்ளது. எல்லைகள் : வடக்கே வீரராகவன் சாலை, தெற்கே மீதமுள்ள 900 சதுர அடி நிலம், கிழக்கே திரு. சங்கருக்குச் சொந்தமான சொத்து, மேற்கே 7 அடி அகலமுள்ள பொதுவான பாதை, விஸ்தீரணம் : வடக்கே: 20 அடி, தெற்கே 20 அடி, கிழக்கே 23 அடி, மேற்கே 23 அடி, இந்த சொத்து சென்னை வடக்கு பதிவு மாவட்டம் மற்றும் திருவொற்றியூர் சார் பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது. வடக்கு – வீரராகவன் சாலை, தெற்கு – மீதமுள்ள 900 சதுர அடி நிலம், கிழக்கு – திரு. சங்கருக்குச் சொந்தமான சொத்து, மேற்கு – 7 அடி அகலமுள்ள பொதுவான பாதை. | 22/நவம்பர்/25 அடையாள சுவாதீனம் |
| 2 | ஜோதி என், நாராயணசாமி வி, ராமு என் HL0000000189173 | 23/ஜூலை/25<br>19/ஜூலை/25 அன்று ரூ.2747896 | நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். வில்லா மனை எண்.16, அங்கீகரிக்கப்பட்ட லேஅவுட், சர்வே எண். 386/1A, 2B, 2C & 3, கப்பியாம்புலியூர் கிராமம், (விக்ரவாண்டி நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்டது கடிதம் எண். Ka.No. 4059/2018/ தேதியிட்டது 07/09/2018 ஒப்புதல் எண்.R969/2018) விழுப்புரம் தாலுகா, விழுப்புரம் மாவட்டம், விஸ்தீரணம் 1020 சதுர அடி நிலத்தில் 1750 சதுர அடி நிலத்தில் சூப்பர் பில்டப் ஏரியா மற்றும் மின்சார இணைப்பு, வைப்புத்தொகை, குடிநீர் இணைப்பு மற்றும் கழிவுநீர் இணைப்பு. வடக்கு – 23 அடி அகலம் கிழக்கு முதல் மேற்கு வரை லேஅவுட் சாலை., தெற்கு – மனை எண்.16A, கிழக்கு – மனை எண்.15, மேற்கு – தேசிய நெடுஞ்சாலை | 22/நவம்பர்/25 அடையாள சுவாதீனம் |
| 3 | பாபு வி, சங்கரா பி HL0000000068549 & HL0000000084597 & HL0000000122125 | 22/அக்டோபர்/24<br>17/அக்டோபர்/24 அன்று ரூ.583621 & ரூ.1620931 & ரூ.766117 | அசையா சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். இந்த சொத்தானது மனை எண்.12, கோகுலம் அவென்யூ, சர்வே எண்.154/1, 154/2, 154/3, 154/4a, 154/4b, 154/5a, 154/5b, பட்டா எண். 1265 & 5926, புதிய சர்வே எண் 154/4A1/A, 154/4A1/A, 14B, ஆரணி கிராமம், பொன்னேரி திருவள்ளூர், தமிழ்நாடு 601101–ல் உள்ளது. விஸ்தீரணம் 1559 சதுர அடி அல்லது 144.83 சதுர மீட்டர். வடக்கு : 30 அடி சாலை, தெற்கு : காலி நிலம், கிழக்கு : 30 அடி சாலை, மேற்கு : மனை எண் 11 | 25/நவம்பர்/25 சுவாதீனம் |

தேதி : 27.11.2025
இடம் : சென்னை, விழுப்புரம், திருவள்ளூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்


**NAME CHANGE**

I, **K.Hariprasath**, S/o Krishnamoorty, date of birth: 02.07.1986, staying at Ramakrishna Mission Students' Home, no.66, P.S. Sivasamysalai, Mylapore, Chennai-600 004, shall henceforth be known as
**Brahmanyananda Swami**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF AT ALANDUR**
**I.A.No.2 of 2024**
**in**
**O.S.No.15 of 2021**

Mrs.C.Mary Fathima ...Petitioner/Plaintiff
Vs
Mr.S.Sasikumar & another ...Respondents/Defendants

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் கடைசியாக தெரிந்த முகவரி

To:
R1.Mr.S.Sasikumar, S/o.Subburayan,
R2.Mr.Jayaraman, S/o.Ramalingam,
Both are residing at Door No.3/1, TVKK Nagar, 9th Street, Podinayakkanur, Pincode 625513, Theni District.

இதன் மூலம் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் ஆகிய உங்களுக்கு தெரிவிப்பது யாதெனில் மனுதாரர்/வாதி உங்களுக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்கு வரும் 04.12.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவும் மேற்கண்ட நீதிமன்றத்தில் காலை 10.30 மணியளவில் ஆஜராகி உங்கள் மறுப்பை தெரிவித்துக் கொள்ளவும் தவறும்பட்சத்தில் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக தீர்ப்பாகும் என்பதை அறியவும்.

மா.தங்கதுரை
மனுதாரர்/வாதியின் வழக்கறிஞர்.

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF AT ALANDUR**
**O.S.No.547 OF 2009**

Mrs.Santhosam ... Plaintiff
Vs
Mr.T.Devaraj & others ...Defendants

8வது, முதல் 11வது வரை பிரதிவாதிகளின் கடைசியாக தெரிந்த முகவரி

To:-
D8.Mrs.Mohana, W/o.late.Babu @ Venkatesan,
D9.Ms.Vijayalakshmi, D/o.late.babu @ Venkatesan,
D10.Ms.Pavithra, D/o.late.Babu @ Venkatesan,
D11.Mr.Sriram, S/o.late.Babu @ Venkatesan,
All are residing at No.117, Butt Road, St.Thomas Mount, Chennai 600 016.

இதன் மூலம் 8வது, முதல் 11வது பிரதிவாதிகள் ஆகிய உங்களுக்கு தெரிவிப்பது யாதெனில் வாதி உங்களுக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்கு வரும் 03.12.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவும் மேற்கண்ட நீதிமன்றத்தில் காலை 10.30 மணியளவில் ஆஜராகி உங்கள் மறுப்பை தெரிவித்துக் கொள்ளவும் தவறும்பட்சத்தில் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக தீர்ப்பாகும் என்பதை அறியவும்.

மா.தங்கதுரை
வாதியின் வழக்கறிஞர்

## பொது அறிவிப்பு

இதனால் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், சொத்து விவரம் (இனம் 1 மற்றும் இனம் 2ல் குறிப்பிடப்பட்டிருக்கும் சொத்தின் தற்போதைய உரிமையாளர் "M/s. The World Community Service Centre" மேற்படி சொத்து விவரம் பகுதியில் (இனம்1) என குறிப்பிடப்பட்டிருக்கும் சொத்தின் தாய்ப் பத்திரம், அதாவது தாம்பரம், சார் பதிவாளர் அலுவலகத்தில், 1988ம் வருடம் டிசம்பர் மாதம் 09ம் தேதியன்று, புத்தகம்1ல், வால்யூம் 1562, பக்கங்கள் 41 முதல் 46 வரை, பதிவான கிரையப் பத்திர ஆவண எண், 6027ஆக பதிவு செய்யப்பட்ட அசல் பத்திரத்தினை காணவில்லை மற்றும் (இனம் 2) ஆவணமான தாம்பரம், சார் பதிவாளர் அலுவலகத்தில், 1988ம் வருடம் டிசம்பர் மாதம் 09ம் இன தேதியன்று, புத்தகம்1ல், வால்யூம் 1562, பக்கங்கள் 49 முதல் 54 வரை, பதிவான கிரையப் பத்திர ஆவண எண். 6028ஆக பதிவு செய்யப்பட்ட அசல் பத்திரத்தினை காணவில்லை என்றும், மேற்படி உள்ள கிரையப் பத்திரங்களின் அசலினை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தெரிவிக்கிறார்கள். மேற்படி காணாமல் போன பத்திரத்தினை வைத்து மேற்படி எனது கட்சிக்காரர்கள் எந்தவிதமான கடனோ அல்லது வில்லங்கமோ ஏற்படுத்தவில்லை என்று உறுதி கூறுகிறார்கள். எனவே, மேற்படி ஆவணம் எவரிடமாவது இருந்து, அதன் அடிப்படையில் மேற்படி சொத்தின் மீது எவருக்கேனும் எந்த விதமான உரிமையோ அல்லது பாத்தியமோ இருந்தால், அது சம்பந்தமான முழு ஆவண ஆதாரங்களுடன், எழுத்து மூலமாக கீழ்காணும் முகவரிக்கு இந்த அறிவிப்பு வெளியிட்ட பதினான்கு நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில், கீழ்காணும் சொத்தின் மீது யாருக்கும் எந்தவிதமான உரிமையும் பாத்தியமும் இல்லை என எடுத்துக் கொள்ளப்படும்.

**சொத்து விவரம்**

**இனம் 4:**
செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், தென் சென்னை பதிவு மாவட்டம், தாம்பரம் உப பதிவு மாவட்டம், செம்பாக்கம் கிராமம், சர்வே எண் 142/2, வீஸ்தீரணம் 2457 சதுரடி கொண்ட காலி மனை.

**எல்லைகள் விபரம்**

வடக்கில் 20 அடி ரோடு
தெற்கில் சர்வே எண். 142/3A நிலம்
கிழக்கில் 20 அடி ரோடு
மேற்கில் ஜான் ஸ்டீபன் நிலம்,
இதன் மத்தியில்,
கிழக்கு மேற்கு அடி வடபுறம் : 27 அடி,
கிழக்கு மேற்கு அடி தென்புறம் : 27 அடி,
வடக்கு தெற்கு அடி கீழ்புறம் : 91 அடி,
வடக்கு தெற்கு அடி மேல்புறம்: 91 அடி,
ஆக மொத்தம் 2457 சதுரடி கொண்ட காலி மனை.

**இனம் 2:**
செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், தென் சென்னை பதிவு மாவட்டம், தாம்பரம் உப பதிவு மாவட்டம், செம்பாக்கம் கிராமம், சர்வே எண் 42/2. வீஸ்தீரணம் 2457 சதுரடி கொண்ட காவி மனை.

**எல்லைகள் விபரம்**

வடக்கில் 20 அடி ரோடு
தெற்கில் சர்வே எண். 142/3A நிலம்
கிழக்கில் டௌலத் பிபீ நிலம்
மேற்கில் ஜான் ஸ்டீபன் நிலம்,
இதன் மத்தியில்,
கிழக்கு மேற்கு அடி வடபுறம் : 27 அடி,
கிழக்கு மேற்கு அடி தென்புறம் : 21 அடி,
வடக்கு தெற்கு அடி கீழ்புறம் : 91 அடி,
வடக்கு தெற்கு அடி மேல்புறம்: 91 அடி,
ஆக மொத்தம் 2457 சதுரடி கொண்ட காலி மனை.

மேற்கூறிய இனம் 1 (2457 சதுரடி) மற்றும் இனம் 2 (2457 சதுரடி) இரண்டு மனைகளையும் சேர்த்து ஆக மொத்தம் 4914 சதுரடி மனை மற்றும் அதில் 1200 சதுரடியில் கட்டடப்பட்டுள்ள ஆர்.சி.சி. தளம் போட்ட வீட்டிற்கு உட்பட்ட சொத்தாகும்.

M/S. J.V.Associates
K.S.V. Sethuraman
Advocate,
Flat No.C3'Thruvenkates Flate"
Periyar Street in 18th Street,
Naganallur, Chennai 600061

## பொது அறிவிப்பு

இதனால் அனைவருக்கும் அறிவிப்பது) என்னவென்றால், சொத்து) விவரம் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் சொத்தின் தற்போதைய உரிமையாளர்கள், திரு. எஸ். பாலசுந்தரம் மற்றும் பலர், மேற்படி சொத்து விவரம் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் சொத்தின் தாய்ப் பத்திரங்களில் ஒரு ஆவணமான பல்லாவரம், சார் பதிவாளர் அலுவலகத்தில், 11.03.1961ம் தேதியன்று புத்தகம்1, ல், பதிவான 1961ம் வருடத்திய கிரையப் பத்திர ஆவண எண். 699 ஆக பதிவு செய்யப்பட்ட அசல் பத்திரத்தினை காணவில்லை என்று, மேற்படி தெரிவிக்கிறார்கள். மேற்படி காணாமல் போன பத்திரத்தினை வைத்து மேற்படி சொத்தின் தற்போதைய உரிமையாளர்கள் எந்தவிதமான கடனோ அல்லது வில்லங்கமோ ஏற்படுத்தவில்லை என்று உறுதி கூறுகிறார்கள். எனவே, மேற்படி ஆவணம் எவரிடமாவது இருந்து, அதன் அடிப்படையில் மேற்படி சொத்தின் மீது எவருக்கேனும் எந்த விதமான உரிமையோ அல்லது பாத்தியமோ இருந்தால், அது இக சம்பந்தமான முழு ஆவண ஆதாரங்களுடன், எழுத்து மூலமாக கீழ்காணும் முகவரிக்கு இந்த அறிவிப்பு வெளியிட்ட பதினான்கு நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது!. தவறும் பட்சத்தில், கீழ்காணும் சொத்தின் மீது யாருக்கும் எந்தவிதமான உரிமையும் பாத்தியமும் இல்லை என எடுத்துக்கொள்ளப்படும்.

**சொத்து விபரம்**

அயிட்டம் எண்1
சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், தென் சென்னை பதிவு மாவட்டம், வேளச்சேரி உப பதிவு மாவட்டம், மடிப்பாக்கம் மதுரா புழுதிவாக்கம் கிராமம், கதவு எண். 79, பைமாஷ் எண் 981/2, சர்வே எண். 230/11 பகுதி, பட்டா எண். 9616, புதிய சர்வே எண். 230/11B, வீஸ்தீரணம் 3668 சதுரடி (3308 சதுரடி மனை மற்றும் 360 சதுரடி. கொண்ட பாதை பகுதி) கொண்ட மனை.

எல்லைகள் விபரம்

வடக்கில் கிருஷ்ணன் மகன்கள் விற்ற சொத்து
தெற்கில் இந்த பொது அதிகாரப் பத்திரத்தின் ஷெட்டியூல் சொத்து
அயிட்டம் எண். 2 மற்றும் செங்கழனி அம்மன் கோயில் தெருவுக்கு செல்லும் 6 அடி பாதை
கிழக்கில் சின்னமாளின் நிலம்
மேற்கில் சர்வே எண். 230/10ல் உள்ள வீடு
இதன் மத்தியில்,
கிழக்கு மேற்கு அடி வடபுறம் : 43 அடி,
கிழக்கு மேற்கு அடி தென்புறம் : 40 அடி 9 அங்குலம் ,
வடக்கு தெற்கு அடி கீழ்புறம் : 79 அடி,
வடக்கு தெற்கு அடி மேல்புறம் : 79 அடி,
ஆக மொத்தம் 3668 சதுரடி கொண்ட மனை மற்றும் மேற்படி மனையினில் கட்டப்பட்டுள்ள கட்டிடம், மின் இணைப்பு மற்றும் இதர சமஸ்த பாத்தியதைகள் உட்பட்ட சொத்து மட்டும்.

அயிட்டம் எண். 2
சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், தென் சென்னை பதிவு மாவட்டம், வேளச்சேரி உப பதிவு மாவட்டம், மடிப்பாக்கம் மதுரா புழுதிவாக்கம் கிராமம், பைமாஷ் எண்981/2, சர்வே எண். 230/11 பகுதி, பட்டா எண்..9615, புதிய சர்வே எண். 230/11C, வீஸ்தீரணம் 1817 சதுரடி கொண்ட மனை,

எல்லைகள் விபரம்

வடக்கில் திரு. பாலசுந்தரம் நிலம் அயிட்டம் எண். 1ன் ஷெட்டியூல் சொத்து
தெற்கில் 30 அடி ரோடு (செங்கழனி அம்மன் கோயில் தெரு)
கிழக்கில் 6 அடி வழிபாதை
மேற்கில் சர்வே எண். 230/10ல் உள்ள வீடு
இதன் மத்தியில்,
கிழக்கு மேற்கு அடி வடபுறம் : 31 அடி,
கிழக்கு மேற்கு அடி தென்புறம் : 31 அடி,
வடக்கு தெற்கு அடி கீழ்புறம் : 60 அடி,
வடக்கு தெற்கு அடி மேல்புறம் : 57 அடி 3 அங்குலம்,
ஆக மொத்தம் 1817 சதுரடி கொண்ட மனை மற்றும் மேற்படி மனையினில் கட்டப்பட்டுள்ள கட்டிடம், மின் இணைப்பு மற்றும் இதர சமஸ்த பாத்தியதைகள் உட்பட்ட சொத்து மட்டும்.

M/S. J.V.Associates
K.S.V. Sethuraman
Advocate,
Flat No.C3'Thruvenkates Flate"
Periyar Street in 18th Street,
Naganallur, Chennai 600061

**படிவம்-A பொது அறிவிப்பு**

[2017 விதி 14ன் கீழ் இந்திய இன்சால்வன்சி மற்றும் பேங்க்ரப்சி வாரியத்தின் (கலைப்பு செயல்பாடுகள்)]

**SEMBA VALLEY FARMS PRIVATE LIMITED**
**நிறுவனத்தின் கடன் வழங்குநர்களின் கவனத்திற்கு**

| தொடர்புடைய விளக்கங்கள் | | |
|---|---|---|
| 1. | நிறுவன கடனாளர் பெயர் | SEMBA VALLEY FARMS PRIVATE LIMITED |
| 2. | நிறுவன கடனாளர் இணைக்கப்பட்ட தேதி | 23-09-2015 |
| 3. | அதிகாரத்தின் கீழ் நிறுவன கடனாளர் இணைப்பு / பதிவு | நிறுவனங்கள் சட்டம். 2013 |
| 4. | நிறுவன கடனாளரின் நிறுவன அடையாள எண்/ வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண். | U01100TN2015FTC102309 |
| 5. | நிறுவன கடனாளரின் பதிவு அலுவலகத்தின் முகவரி | அஸூர் ஓசியானிக், ஸ்கை 7, 1147, எண். 40, தெற்கு கனால் பேங்க் சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 600028. |
| 6. | நிறுவன கடனாளிகளைப் பொறுத்தவரை திவால் நிலை தொடக்க தேதி | 24-11-2025 |
| 7. | இடைக்காலத் தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் வாரியத்தில் பதிய பட்ட மின்னஞ்சல் முகவரி மற்றும் பதிவு எண். | சங்கர் வரதராஜன், தொடர்பு முகவரி: எண்.6/12, அப்பாவு கிராமணி, 1வது தெரு, மந்தைவெளி, சென்னை - 600028 மொபைல் எண்: 9791169369, மின்னஞ்சல் ஐடி: advsankarirp@gmail.com பதிவு எண்: IBBI/IPA-002/IP-N01057/2020-2021/13449 |
| 8. | கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 26-12-2025 |

SEMBA VALLEY FARMS PRIVATE LIMITED -ன் பெருநிறுவன திவால்நிலை தீர்மான செயல்முறையை நவம்பர் 24, 2025 அன்று தொடங்க உத்தரவிட்டுள்ளதாக இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

SEMBA VALLEY FARMS PRIVATE LIMITED -ன் கடன் வழங்கியவர்கள், 26-12-2025 அன்று அல்லது அதற்கு முன்னர், வரிசை எண். 7 க்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள இடைக்காலத் தீர்மான நிபுணரிடம் தங்கள் உரிமைகோரல்களை ஆதாரத்துடன் சமர்ப்பிக்குமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இன்சால்வென்ஸி அண்டு பேங்க்ரப்சி போர்டு ஆப் இந்தியா (தன்னிச்சையாக கலைத்தல் நடைமுறை) விதிமுறைகள் 2017-ன் கீழ் ஆதாரங்களுடன் கூடிய தங்களது உரிமை கோரல்களை சமர்ப்பிக்கவேண்டும். உரிமை கோரல்களுக்கான ஆதாரத்தை பின்வரும் படிவங்களை உறுதி மொழி பத்திரத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். உரிமை கோரல்களை ஆதாரிக்கும் ஆவண ஆதாரம்: செயல்பாட்டு கடன்தாரர்களுக்கான உரிமை கோரல் படிவம்-B, நிதிநிலை கடன்தாரர்களுக்கான உரிமைக்கோரல் படிவம்-C, பணியாளர்கள் அல்லது ஒரு பணியாளருக்கான உரிமை கோரலுக்கு படிவம்-D, பணியாளர்கள் அல்லது ஒரு பணியாளருக்கான அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் உரிமை கோரல் படிவம்-E, மற்றும் வேறு ஏதாவது கடன்தாரர்கள் தங்களது உரிமை கோரல்களை படிவம்-F லும் சமர்ப்பிக்க வேண்டும். இன்சால்வென்ஸி அண்டு பேங்க்ரப்சி போர்டு ஆப் இந்தியா (தன்னிச்சையாக கலைத்தல் நடைமுறை) விதிமுறை - 2017-ன் கீழ் மேலே குறிப்பிட்டுள்ள படிவங்களை www.ibbi.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நிதி கடன் வழங்கியவர்கள் தங்கள் உரிமைகோரல்களை மின்னணு முறையில் மட்டுமே ஆதாரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். மற்ற அனைத்து கடன் வழங்கியவர்களும் நேரில், தபால் அல்லது மின்னணு முறையில் ஆதாரத்துடன் உரிமைகோரல்களைச் சமர்ப்பிக்கலாம்.

தவறான அல்லது தவறாக கோரிக்கை ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

**சங்கர் வரதராஜன்,**
தொடர்பு முகவரி: எண்.6/12, அப்பாவு கிராமணி, 1வது தெரு, மந்தைவெளி, சென்னை - 600028
மொபைல் எண்: 9791169369,
மின்னஞ்சல் ஐடி: advsankarirp@gmail.com
பதிவு எண்: IBBI/IPA-002/IP-N01057/2020-2021/13449

தேதி : 26-11-2025
இடம் : சென்னை

**படிவம் எண். NCLT. 3A**
**மனு விவரம் குறித்த விளம்பரம்**
**[தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாய விதிகள், 2016-ன் விதி 35-ஐப் பார்க்கவும்]**
**மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் முன்பாக சென்னை அமர்வு-I**

**கல்ட்ஃபிட் ஹெல்த்கேர் பிரைவேட் லிமிடெட்**
**(மனுதாரர் நிறுவன எண். 1 / பிரிக்கப்பட்ட நிறுவன எண். 1 / மாற்றிக்கொள்ளும் நிறுவனம்)**
**மற்றும்**
**க்யூர்ஃபிட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்**
**(மனுதாரர் நிறுவன எண். 2 / பிரிக்கப்பட்ட நிறுவன எண். 2 / மாற்றப்படும் நிறுவனம்)**
**மற்றும்**
**க்யூர்ஃபிட் ஹெல்த்கேர் பிரைவேட் லிமிடெட்**
**(மனுதாரர் நிறுவன எண். 3 / விளைவு நிறுவனம்)**
**மற்றும்**
**அந்தந்த நிறுவனங்களின் மரியாதைக்குரிய பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்கள்**
**இடையே சீரமைப்பு திட்டம் தொடர்பான விஷயத்தில்**
**நிறுவன மனு (CAA) எண். 85/CHE/2025**
**நிறுவன விண்ணப்பம் (CAA) எண்.49/CHE/2025**
**உடன் தொடர்புடையது**

**கல்ட்ஃபிட் ஹெல்த்கேர் பிரைவேட் லிமிடெட்**
**(CIN: U74999TN2016PTC176668)**
நிறுவனங்கள் சட்டம் 2013ன் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம், பதிவு அலுவலகம்: புதிய எண். 10, பழைய எண். 28, சங்கராலயா, 3வது குறுக்குத் தெரு, ஆர்.கே.நகர், ஆர்.ஏ.புரம், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு, இந்தியா - 600028 சார்பில் **அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர் திரு. சிவராம்நாராயணன்** அவர்கள்
**...(மனுதாரர் நிறுவன எண். 1 / பிரிக்கப்பட்ட நிறுவன எண். 1 / மாற்றிக்கொள்ளும் நிறுவனம்.)**

**க்யூர்ஃபிட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்**
**(CIN: U74110TN2016PTC176487)**
நிறுவனங்கள் சட்டம் 2013ன் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம், பதிவு அலுவலகம்: புதிய எண். 10/28, சங்கராலயா, 2வது தளம், 3வது குறுக்குத் தெரு, ஆர்.கே.நகர், மந்தவெளி, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு, இந்தியா - 600028 சார்பில் **அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர் திரு. சிவராம்நாராயணன்** அவர்கள்
**...(மனுதாரர் நிறுவன எண். 2 / பிரிக்கப்பட்ட நிறுவன எண். 2 / மாற்றப்படும் நிறுவனம்)**

**க்யூர்ஃபிட் ஹெல்த்கேர் பிரைவேட் லிமிடெட்**
**(CIN: U74999TN2016PTC176669)**
நிறுவனங்கள் சட்டம் 2013ன் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம், பதிவு அலுவலகம்: புதிய எண்.10, பழைய எண்.28, சங்கராலயா, 2வது தளம், 3வது குறுக்குத் தெரு, ஆர்.கே.நகர், ஆர்.ஏ.புரம், மந்தவெளி, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு, இந்தியா - 600028. சார்பில் **அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர் திரு. சிவராம்நாராயணன்** அவர்கள்
**...(மனுதாரர் நிறுவன எண். 3 / விளைவு நிறுவனம்)**

**இவை அனைத்தும் சேர்ந்து "மனுதாரர் நிறுவனங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.**

**மனு குறித்த அறிவிப்பு**

கல்ட்ஃபிட் ஹெல்த்கேர் பிரைவேட் லிமிடெட் ( மனுதாரர் நிறுவன எண். 1 / பிரிக்கப்பட்ட நிறுவன எண்.1 / மாற்றிக்கொள்ளும் நிறுவனம்) மற்றும் க்யூர்ஃபிட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (மனுதாரர் நிறுவன எண். 2 / பிரிக்கப்பட்ட நிறுவன எண்.2 / மாற்றப்படும் நிறுவனம்) மற்றும் க்யூர்ஃபிட் ஹெல்த்கேர் பிரைவேட் லிமிடெட் (மனுதாரர் நிறுவன எண்.3 / விளைவு நிறுவனம்) மற்றும் அந்தந்த நிறுவனங்களின் மரியாதைக்குரிய பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்கள் இடையே சீரமைப்பு திட்டம் தொடர்பாக ஒப்புதலைப் பெறுவதற்காக மனுதாரர் நிறுவனங்களால் கூட்டு நிறுவன மனு ஒன்று நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவுகள் 230 முதல் 232 வரையின் கீழ் நவம்பர் 19, 2025 அன்று தாக்கல் செய்யப்பட்டு, இந்த மனு, ஜனவரி 7, 2026 அன்று மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு முன்பாக விசாரணைக்கு வருகிறது. இந்த மனுவை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் எவரும், மனுதாரர் நிறுவனங்களின் வழக்கறிஞர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு. ஆர் இன்பராஜு அவர்களுக்கு, போகினேனி 59, 1வது மாடி, 9வது மெயின், 14வது குறுக்கு 2வது ஸ்டேஜ், இந்திரா நகர், பெங்களூரு - 560038 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்திற்கு, அவரது பெயர் மற்றும் முகவரியுடன் கூடிய அவரது நோக்க அறிவிப்பை மனுவை விசாரிக்க நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு **இரண்டு நாட்களுக்கு** முன்னதாக மனுதாரரின் வழக்கறிஞரை வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும். அவர் மனுவை எதிர்க்க முற்படும் பட்சத்தில், எதிர்ப்பிற்கான காரணங்கள் அல்லது அவரது பிரமாணப் பத்திரத்தின் நகல் அத்தகைய எதிர்ப்பு அறிவிப்புடன் வழங்கப்பட வேண்டும். மனுவின் நகலைக் கோரும் எந்தவொரு நபரும் அதற்கான பரிந்துரைக்கப்பட்ட கட்டணங்களை செலுத்தி, கீழே கையொப்பமிட்டவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| கல்ட்ஃபிட் ஹெல்த்கேர் பிரைவேட் லிமிடெட் (மனுதாரர் நிறுவன எண். 1 / பிரிக்கப்பட்ட நிறுவன எண். 1 / மாற்றிக்கொள்ளும் நிறுவனம்) **ஒப்பம்/- சிவராம்நாராயணன், அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர்** | க்யூர்ஃபிட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (மனுதாரர் நிறுவன எண். 2 / பிரிக்கப்பட்ட நிறுவன எண்.2 / மாற்றப்படும் நிறுவனம்) **ஒப்பம் /- சிவராம்நாராயணன், அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர்** | க்யூர்ஃபிட் ஹெல்த்கேர் பிரைவேட் லிமிடெட் (மனுதாரர் நிறுவன எண். 3 / விளைவு நிறுவனம்) **ஒப்பம் /- சிவராம்நாராயணன், அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர்** |

**தேதி: 27 நவம்பர் 2025**
**இடம்: பெங்களூரு**